# நாளும் ஓர் திருமுறை

# THIRUMURAI A DAY

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தர் அற்புதம்




பதிக வரலாறு :                                பண் : காந்தார பஞ்சமம்

ஆவடுதுறை எந்தையார் அடித்தலங்களே அந்தமில் பொருள் என்று எண்ணித் திருக்கோயிலை அடைந்து, ` ஈயநிதி இலேன் உன் அடி அல்லது ஒன்று அறியேன் ` என்று பேரருள் வினவிய செந்தமிழ் இத்திருப்பதிகம்.

**இடரினும் தளரினும் எனதுறுநோய்**
**தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்**
**கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை**
**மிடறினில் அடக்கிய வேதியனே**

# நாளும் ஓர் திருமுறை

# THIRUMURAI A DAY

**இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்**

**அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.01**

பொழிப்புரை :



**திருப்பாற்கடலில், அமுதம் பெறும் பொருட்டுக் கடைந்தபோது தோன்றிய நஞ்சினைக் கழுத்தில் அடக்கித் தேவர் களைக் காத்த வேதநாயகனே! வாழ்க்கையில் இடையூறு ஏற்பட்டுத் துன்பம் உண்டானாலும், இளமை நீங்கி மூப்பினால் தளர்ச்சி யுற்றாலும், தீவினைப்பயனால் நோய் தொடர்ந்து வந்தாலும் , உன்திரு வடிகளைத் தொழுது வணங்குவேன். அத்தகைய அடியேனை நீ ஆட்கொள்ளும் தன்மை இதுவோ? திருவாவடுதுறையில் வீற்றி ருக்கும் சிவபெருமானே ( உலக நன்மையின் பொருட்டுத் தந்தை செய்ய விரும்புகின்ற வேள்விக்குத் ) தேவைப்படுகின்ற பொருளை நீ எனக்குத் தரவில்லையானால் அஃது உன் திருவருளுக்கு அழகாகுமா ?**

குறிப்புரை :

**இடரினும் - துன்பத்திலும் ; தளரினும் - தளர்ச்சியிலும் ; நோய் தொடரினும் - வினைத் தொடர்ச்சியிலும் , உனகழல் தொழுது எழுவேன் - உம்முடைய திருவடிகளைத் தொழுது எழுவேன். இங்குத் தளர்ந்தாலும் , நோய் தொடர்ந்தாலும் - எனக்கூறின் இடர் என்பதோடு ஒத்து , தளர், தொடர் என்பன முதனிலைத் தொழிற்பெயராய் நின்றன.** (thevaaram.org)

திருச்சிற்றம்பலம்